பக்கங்கள் 17+4

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 23 வியாழக்கிழமை 08.08.2024 | அதிர்வு 07

## துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### பொலிஸ் சார்ஜன்ட் காயம்

சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டுகொடை வீதி சோதனைச் சாவடியில் துப்பாக்கி வெடித்ததில்

04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டணி உதயம்

## சஜித் தலைமையில் பங்காளிக் கட்சிகள் ஒப்பந்தம் கைச்சாத்து

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பங்காளிக் கட்சிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

04

# தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரன் அறிவிப்பு!





(எஸ்.நிதர்ஷன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பான அறிவிப்பு ந.ஸ்ரீகாந்தாவால் வெளியிடப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று அண்மையில் தமிழ் சிவில் சமூகத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

04

# நல்லூரானுக்குக் கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு



















**(எஸ்.நிதர்ஷன்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ள நிலையில், சம்பிரதாயபூர்வ மாக கொடியேற்ற கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு இன்று நடை பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆல யத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அந்தவகையில் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள கொடிச்சீலை உபகாரரின் வீட்டில் இருந்து கொடிச் சீலை யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத் துக்கு அருகில் உள்ள வேல்மடம் முருகன் ஆலயத்துக்கு எடுத்துவரப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து ஆலய வெளி வீதி வலம் வந்து சுபநேரத்தில் கொடிச்சீலை நல்லூர் ஆலயப் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நாளை காலை 10 மணிக்குக் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவப் பெருவிழா தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளன.

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# நல்லூரில் சனநெரிசலை கருத்தில்கொள்ளாது முற்றாக மூடப்பட்ட வீதி

## மனித உரிமை ஆணைக்குழு துரித நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயில் வளாகத்தைச் சுற்றி சில மாற்றங்களுடன் இம்முறை வீதித்தடைகள் அமைக் கப்பட்டுள்ளதுடன் ஆலயத்துக்குப் பின்புறம் உள்ள பருத்தித்துறை வீதி இரும்புத் தகடுகளால் முற்றாக அடைக் கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ள நிலையில் திருவிழாவுக் கான ஏற்பாடுகள் இடம்பெற்று வரு கின்றன.

கடந்த ஆண்டு நல்லூர் பெருந் திருவிழா நேரங்களில் அதிகரித்த பக் தர்களின் எண்ணிக்கை காரணமாக வீதித்தடைகளில் பல அசம்பாவிதங்கள் ஏற்பட்டு பக்தர்கள் பலர் மயக்கமுற் றதுடன் திருட்டுக்கும் வழிவகுத்தது.

இதன்போது ஒரு சிலர் வீதித்தடை களை உடைத்து சென்றதுடன் பொலி ஸார் தலையிட்டு வீதித்தடைகளைத் தளர்த்த நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஆனால், இம்முறை மீண்டும் குறித்த விடயங்கள் எதுவும் கவனத் தில்கொள்ளாமல் பருத்தித்துறை வீதி இரும்புத் தகடுகளால் முற்றாக அடைக் கப்பட்டுள்ளது.

ஆலய முன் வீதியில் ஆலயத்துக்கு மக்கள் சுதந்திரமான முறையில் நடந்து செல்வதற்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், மாற்றுத் திறனாளிகள் பாதைகளை உபயோகிக்க முடியாத வாறும் இராணுவச் சோதனைச் சாவடி கள் போன்ற அமைப்பையுடைய புதிய வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று விமர்சனங்கள் கிளம்பியுள்ளன.

பொதுமக்கள் அதிகளவில் வரும் போது வீதிகளில் இவ்வாறு தடை களை ஏற்படுத்துவது தேவையற்ற பிரச் சினைகளுக்கு வழிவகுக்கும் என்ப தால் முடிந்தவரை தடைகளைத் தளர்த்த யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகர சபையால் பொதுமக்களுக்கு உபிரா பத்தை ஏற்படுத்தும் வகையில் அமைக் கப்பட்டுள்ள வீதித் தடை தொடர்பில் பல தரப்பினராலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் கவனத் துக்குக் கொண்டுவரப்பட்ட முறைப்பாடு தொடர்பில் இந்த ஆணைக்குழுவால் கவனம் செலுத்துப்பட்டுள்ளது என்று பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாளை வெள் ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இலக்கம் 42, கோவில் வீதியில் அமைந் துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்திற்குச் சமூகமளிக்குமாறு யாழ். மாநகர சபையின் ஆணையா ளர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு விதித்த மரணதண்டனையை உறுதி செய்த உயர்நீதிமன்றம்



முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து குணவர்தன ஆகியோ ருக்கு விதிக்கப்பட்ட மரணதண்ட னையை உயர்நீதிமன்றம் உறுதிப் படுத்தியுள்ளது.

2013 ஆம் ஆண்டு கொழும்பு – பம்பலப்பிட்டி பிரதேசத்தில் முகமட் சியாம் என்ற கோடீஸ்வர வர்த்தக ரைக் கடத்திச் சென்று கொலை செய் தது தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன அவரது மகன் ரவிந்து குணவர்தன உட்பட 6 பேருக்கு நீதிமன்றம் மரண தண்டனையை விதித்திருந்தது.

வாஸ் குணவர்தன மற்றும் ஏனைய பிரதிவாதிகள் தம்மை அந்தத் தண்டனை யிலிருந்து விடுவிக்குமாறு கோரி தாக் கல் செய்த மேன்முறையீட்டு மனுக் களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம், அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்துள்ளதுடன் மரணதண்ட னையை உறுதி செய்துள்ளது.

# பாரம்பரிய மீன்பிடி வலைகளை அகற்றுவதற்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிப்பு

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, கிராஞ்சி கடற்பிரதேசத்தில் பல்லாண்டு காலமாக பாரம்பரிய சிறகுவலையைப் பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் மூன்று மீனவர்களின் சிறகு வலைகளை அகற்றுவதற்குக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு எதிராக இன்று கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை விதித்து கட்டளையிட்டது.

கிளிநொச்சி, கிராஞ்சி கடற்பிரதேசத்தில் பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட வந்த மூன்று மீனவர்களின் சிறகு வலைகளை 2022 காலப்பகுதிகளில் கிராஞ்சி கடற்பிரதேசத்துக்குப் பரிசோதனைக்குச் சென்ற கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட வலைகள் சட்டவிரோதமானவை என்ற அடிப்படையில் கையகப்படுத்தி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முயற்சித்தபோது மீனவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

அரச கடமைகளைச் செய்ய ஊறு விளைவித்ததாகக் கூறி குறிப்பிட்ட மீனவர்களுக்கு எதிராக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்து குறிப்பிட்ட மீனவர்களின் வலைகளைக் கைப்பற்றி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த கட்டளை ஒன்றைக் கோரியிருந்தனர்.

முறைப்பாட்டாளர்களால் நீதிமன்றத்துக்குத் தாக்கல் செய்த தகவல் அறிக்கையில் குறிப்பிட்ட மீனவர்கள் அனுமதிப் பத்திரம் இன்றி கம்பப்பொறி வலையைப் பாவித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர் எனவும், இலங்கையின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக கம்பப் பொறிவலையானது அனுமதிப்பத்திரம் பெற்று செய்யப் பட வேண்டிய ஒரு மீன்பிடி முறைமையாகும் எனவும் தெரிவித்திருந்தனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் சார்பாக நீதிமன்றத்தில் தோன்றிய கற்றறிந்த சட்டத்தரணிகள் மீனவர்கள் பாரம்பரிய சிறகுவலையைக் கொண்டே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர் எனவும், சிறகுவலையானது வடக்கு மாகாணத்தில் நூற்றாண்டு காலமாகப் பின்பற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ள மீன்பிடி முறை எனவும், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு கம்பப்பொறி வலைக்கும் பாரம்பரிய சிறகு வலைக்கும் வேறுபாடுகள் தெரியவில்லை எனவும் சமர்ப்பணங்களை மேற்கொண்டிருந்தனர்.

கிராஞ்சி கடற்பிரதேசத்தில் அண்மைக் காலங்களாகத் தோன்றி வரும் சட்டவிரோதக் கடல் அட்டைப் பண்ணைகள் பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்துகின்றது என்பதற்காக சட்டவிரோதக் கடல் அட்டைப் பண்ணைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த மீனவர்களைப் பழிவாங்குவதற்காகவே இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மேற்படி மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இருதரப்பின் வாதங்களையும் செவிமடுத்த நீதிவான் நீதிமன்றம் குறிப்பிட்ட வலையானது கம்பப்பொறி வலையா அல்லது சிறகு வலையா என்பதை உறுதிப்படுத்த நிபுணத்துவ சாட்சியம் அவசியம் என்றும் குற்றச்சாட்டுப் பத்திரத்தைத் தாக்கல் செய்து விளக்கம் ஒன்றை ஆரம்பிக்கும் முகமாக எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட மீனவர்களின் வலைகளை அகற்றி நீதிமன்றத்துக்கு முற்படுத்துமாறு கட்டளை ஒன்றை ஆக்கி இருந்தது.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக மூன்று மீனவர்களும் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

மீளாய்வு விண்ணப்பத்தில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவகத்திற்கும் எது சிறகு வலை எது கம்பப்பொறி வலை என்பது சம்பந்தமான தெளிவான நிலைப்பாடு இல்லை எனவும், குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு சான்றுப் பொருளைக் கட்டாயம் கைப்பற்றி நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற சட்டத்தேவைப்பாடு இல்லை எனவும், கடற்றொழில் நீரியல் வளச் சட்டத்தின் பிரகாரம் சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் சந்தேகநபர்கள் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் மாத்திரம் அதனுடன் தொடர்புடைய சான்றுப் பொருட்களைக் கைப்பற்ற முடியும் எனவும் தெரிவித்திருந்தனர்.

இவ்வலைகள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்துவதன் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும் வலைகள் கைப்பற்றப்படுவதன் காரணமாக என்ன நோக்கத்திற்காக இவ்வழக்கு விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றதோ அது அடையப்படாமல் போய்விடும் எனவும் தெரிவித்திருந்தனர்.

இரு தரப்பின் சமர்ப்பணங்களையும் கவனமாகச் செவியுற்ற கிளிநொச்சி மேல் நீதிமன்றம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட மீனவர்களின் வலைகளைக் கையகப்படுத்துவதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதித்ததுடன் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தி இன்று கட்டளை ஆக்கி இருக்கின்றது.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் சார்பாக சட்டத்தரணிகள் ஜாபிர் நாஸி முஹம்மட், எப். எச். ஏ. அம்ஜாட், முபாறக் அஸ்ஸம் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

கிளிநொச்சி, கிராஞ்சி கடற்பிரதேசத்தில் பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி இடங்களுக்கு மேல் சட்டவிரோதமாக கடல் அட்டைப்பண்ணைகளை அமைப்பவர்களுக்கு எதிராகப் போராடி வருகின்ற பாரம்பரிய மீனவர்களுக்கு கிடைத்த ஒரு வெற்றியாக இதனைக் கருதலாம்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## துப்பாக்கி வெடித்ததில்...

குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயத்துக்கு உள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சீதுவை பொலிஸ் நிலைய அதிகாரிகள் சீதுவைப் பகுதியிலிருந்து வந்த காரைச் சோதனையிட முற்பட்டபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரின் இடது ஆசனத்தில் அமர்ந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் சார்ஜன்டின் கடமைத் துப்பாக்கியைப் பறிக்க முற்பட்டபோது, துப்பாக்கி வெடித்ததில் பொலிஸ் அதிகாரியின் காலிலும், பறிக்க முற்பட்ட நபரின் வயிற்றிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டன.

பின்னர் இருவரும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் காரில் பயணித்த பூகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் பொது...

சிவில் சமூகக் கட்டமைப்பினருடன் இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ் தேசிய பசுமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன ஆதரவளிக்கவுள்ளன.


இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை என்பதுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அரியநேந்திரன் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள்...

அதற்கமைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தயாசிறி ஜயசேகர அணி உள்ளிட்ட முக்கிய கட்சிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இதற்கு முந்தைய தேர்தல்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்தே செயற்பட்டது. எனினும், இம்முறை அக்கட்சி அவ்வாறானதொரு தீர்மானத்தை அறிவிக்கவில்லை. அடுத்த வாரமே நாம் யாருக்கு ஆதரவு என்பதை அறிவிக்கவுள்ளோம் என்று ரிஷாத் கட்சியினர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சஜித்தின் வெற்றி நடை

ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. பிரதான வேட்பாளர்களை ஒட்டிய கூட்டுகள் பெரும்பாலும் இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு இன்று உருவாகியுள்ளது.

இந்தப் புதிய கூட்டணியான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எட்டுக் கட்சிகள் இணைந்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திர மக்கள் சபை, அர்ஜுன ரணதுங்கவின் மக்களின் குரல் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தயாசிறி ஜயசேகரவின் தரப்பு உள்ளிட்ட 08 கட்சிகள் கூட்டமைப்பின் பிரதான பங்காளிகளாக உள்ளன.

இந்தக் கட்சிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இன்று வியாழக் கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்களில் ஆரவாரமாக இடம்பெற்றிருக்கின்றது.

பிளவுபடாத ஐக்கிய நாட்டுக்குள் சகலருக்கும் சமவுரிமை கிடைக்க வேண்டுமென்ற கோட்பாட்டின் பிரகாரம் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றதாகப் புதிய கூட்டமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் எம்.பிகளையும், பல்வேறு சிவில் அமைப்புகளையும், தொழிற்சங்கங்களையும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் இணைப்பதற்கான பேச்சுகள் நடைபெறுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் சஜித் அணியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், பட்டாலி சம்பிக்க ரணவக்கவின் அணி தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளும் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இறுதி முடிவை 14 ஆம் திகதிதான் எடுக்கவுள்ளது. அதேபோல சம்பிக்கவும் காலம் தாழ்த்தி இந்தப் புதிய கூட்டில் சேரக் கூடும்.

எது, எப்படி என்றாலும் தற்போதைய நிலையில் நாட்டில் மிகப்பெரிய அரசியல் கூட்டு இன்று தொடங்கப்பட்ட ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு என்று தென்னிலங்கை விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

ஆயினும் தேர்தல் வெற்றி என்பது கூட்டின் பரிமாணத்தில் அல்ல, மக்கள் ஆதரவில்தான் - செல்வாக்கில்தான் - தங்கி உள்ளது.

பல தரப்புக்களையும் ஒன்றிணைத்து ஐக்கிய மக்கள் கூட்டமைப்பாக கட்டியெழுப்பியிருக்கும் சஜித் பிரேமதாஸ அதன் மூலம் வெற்றி வேட்பாளராக - நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக - மாறுவாரா என்பது இன்னும் 45 நாள்களில் தெரிந்து விடும்.

சரியோ, பிழையோ பெரும் அரசியல் சூறாவளிகள், நெருக்கடிகள், குழப்பங்களுக்கு மத்தியிலும் தமது ஐக்கிய மக்கள் சக்தியையும் அதன் கீழான கூட்டையும் இவ்வளவு காலமும் கணிசமான எம். பிக்கள், தலைவர்கள், கட்சிகளை ஒன்றிணைத்து, கட்டுக்கோப்பாக வைத்திருந்து, சிதைந்து விடாமல் கட்டி எழுப்பி, ஐக்கியமாகப் பயணித்து வந்தமை மூலம் தமது தலைமைத்துவத் திறமையை சஜித் பிரேமதாஸா நிரூபித்திருக்கின்றார் என்றே கொள்ள வேண்டும்.

'இதோ ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து கணிசமான எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் பாய்கின்றார்கள்' என்று அவ்வப்போது காலக்கெடுக்கள் குறிக்கப்பட்டு பரப்பப்பட்ட வதந்திகள், அறிவிப்புகள், செய்திகளை எல்லாம் முறியடித்து, தமது தரப்பை ஐக்கியமாகப் பேணி, ஒற்றுமையாகக் கட்டமைத்து, தமது தலைமைத்துவத்துக்குரிய தனித்துவத்தை சஜித் பிரேமதாஸ நிலைநாட்டி இருக்கிறார் என்பதை அவரது அரசியல் எதிரிகள் கூட இப்போது ஒப்புக்கொண்டையாக வேண்டும்.

இந்த ஜனாதிபதி தேர்தலில் இப்போதைய நிலையில் முன்னணியில் நிற்கும் வேட்பாளர் அவர்தான் என்ற உரிமை கோரலை மறுக்க முடியாத நிலைமைதான் களத்தில் உள்ளது.



# ஆசிரியர் உதவியாளர் பரீட்சை வழிகாட்டல் நூல்கள் கையளிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

ஆசிரியர் உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சாத்திகளுக்கான இலவச வழிகாட்டல் நூல்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மலையக மாணவர் விழிப்பகத்தின் ஊடாக மலையகம் எங்கும் விசேட கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் பரீட்சாத்திகளுக்காக இலவச வழிகாட்டல் நூல்களும், கையேடுகளும் வழங்கப்படுகின்றன.

அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொகவந்தலாவ கெம்பியன் பிரதேசத்தில் பெற்றசோ, லொய்னோன்,கெம்பியன் ஆகிய பிரதேசங்களில் ஆசிரியர் உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் 50 இற்கும் மேற்பட்ட பரீட்சாத்திகளுக்கான இலவச நூல்கள் வழங்கப்பட்டன.

மேலும் வழிகாட்டல் நூல்கள் தேவையுள்ளோர் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.








# கல்முனை ஸாஹிறாவுக்கு தங்கம், வெள்ளிப் பதக்கங்கள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தால் நாடு முழுவதும் நடத்தப்பட்டுவரும் 53 ஆவது சேர் ஜோன் ராபர்ட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் விளையாட்டு போட்டியில், கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவன் எம்.ஆர்.எம். பதாஹீ பாதிக் 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் வென்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இச்சாதனை நிலை நாட்ட ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஏ.எல்.எம். தன்சீல் மற்றும் மாணவனைப் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம். அப்றாஜ் றிழா மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆகியொருக்குப் பாடசாலைச் சமூகம் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது.




# கிழக்கு மாகாணத்தில் தங்கம்; தேசிய மட்டத்துக்குத் தெரிவு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தால் றிஸ்பேர்ரி நிறுவனத் தின் அனுசரனையில் நாடு முழுவதும் நடைபெறும் 53 ஆவது சேர் ஜோன் ட்ராபட் கனிஷ்ட மெய்வல்லுனர் சாம்பியன்ஷி போட்டியில் கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடத்தப் படும் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை (03) மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவன் எம்.எம்.எம். ஆகில் மிகா 15 வயது ஆண்களுக்கான 80 மீற்றர் தடை தாண்டலில் முத லாம் இடத்தையும், 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் 12 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் ஏ.எம்.லாயிஸ் 3.92 மீற்றர் தூரம் பாய்ந்து அதி சிறந்த திறமைகளை வெளிக் காட்டிய வீரர்களுக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.





# கூடைப்பந்தாட்டப் போட்டியில் சாதித்த மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் தமது திறமையை வெளிப்படுத்தி தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நடைபெற்று முடிவடைந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்ட போட்டியில் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி 17 வயதுக்கு உட்பட்ட அணியினரும் 20 வயதுக்கு உட்பட்ட இரண்டு அணியினருமே வெற்றி வாகை சூடி தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மாணவர்களுக்கும் பயிற்சி வழங்கிய ஆசிரியர்களுக்கும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கல்லூரியின் 15 வயது, 17 வயது மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட அணியினருக்கு புதிய சீருடையைக் கல்லூரியின் வட அமெரிக்க பழைய மாணவர் சங்கத்தினர் அன்பளிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.










# புதிய பள்ளிவாசல்களை பதிவு செய்ய நடவடிக்கை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கடந்த 2019 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் புதிய பள்ளிவாசல்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அமைச்சின் உத்தரவுக்கமைய நிறுத்தி வைத்திருந்தது.

அதன்பின்னர் இவ்விடயம் சம்பந்தமாக பல முறை பல முயற்சிகள் இடம் பெற்றிருந்தது. இந்த முயற்சிகள் அனைத்தும் கைகூடாமல் போயிருந்தன.

தற்போது புதிதாக திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையை பொறுப்பேற்றுள்ள எம்.எச்.ஏ.எம். றிப்லான், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் மற்றும் இலங்கை வக்ப் சபையின் உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. மத்தீன் ஆகியோர் இந்த விடயம் சம்பந்தமாக புத்தசாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் செயலாளரரோடு பல சுற்றுப் பேச்சுகளை நடத்தினர்.

இதனை அடுத்துப் பள்ளிவாசல்களின் பதிவை மீண்டும் மீள ஆரம்பித்துள்ளனர்.

அதன் பிரகாரம் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பள்ளிவாசல்கள் மீள் பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மாணவர் சந்தை நிகழ்ச்சி

(எம்.எப்.றிபாஸ்)

கலைத் திட்டத்துக்கு அமைய செயற்படுத்தப்பட்டு வரும் மாணவர் சந்தை நிகழ்ச்சி அட்டாளச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு வளையத் தலைவர் எம்.ஐ.ஜெளபரின் நெறிப்படுத்தலின் கீழ் அதிபர் ஏ. சீ.நியாஸ் தலைமையில் தரம் மூன்று மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம். ரீ.எம். சியாத், ஏ.கே. அனீஸ், எம். ஏ. சுஹைறா, ஏ.ஜே.றினீஸ், ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

தரம் மூன்று மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், மணவர்கள், என பலரும் கலந்து கொண்டு மாணவர் சந்தையில் வைக்கப்பட்டுள்ள பொருள்களைப் பார்வையிட்டனர்.




# நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவர் வென்றனர் தொடர் பதக்கங்கள்!

(நூருல் ஹுதா உமர்)

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கம் நாடு முழுவதும் நடத்தும் 53 ஆவது மெய்வல்லுனர் சம்பியன் ஷிப்-2024 கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது. ஆரம்ப சுற்றுப் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில் கல்முனை கல்வி வலய நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாட சாலை மாணவர்கள் 01 தங்க பதக்கம், 02 வெள்ளி பதக்கங்கள் மற்றும் 06 வெண்கலப் பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்த மாணவர்களை அழைத்துச் சென்று வழிகாட்டிய பொறுப்பாசிரியர் ஏ. கலீம் அஹமட் மற்றும் எம்.எம்.எம். ஹாஸிக் ஆகியோர்களையும், பயிற்று




வித்த ஏனைய உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுப் பயிற்று விப் பாளருக்கும் பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர் கள், கல்விசாரா ஊழியர்கள், மாண வர்கள் அனைவரும் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் வீரர்க ளின் பெற்றோர்களுக்கும் பாராட்டுக் களையும் வாழ்த் துக்களையும் தெரி வித் துக் கொள்வதாக பாடசாலை முதல்வர் ஏ.அப்துல் கபூர் தெரிவித்துள் ளார்.

# யானையின் இறப்பில் மர்மம்; விசாரணைகள் முன்னெடுப்பு!

(பாறுக் ஷிஹான்)

அறுவடை செய்யப்பட்ட வயல் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட யானையின் சடலம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை சின்ன கொக்கநாரை வயல் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) மர்மமான முறையில் உயிரி ழந்த நிலையில் யானையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டிருந்தது.

யானையின் சடலம் இருப்பதை அவதானித்த விவசாயிகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மர்மமான குறித்த யானையின் இறப்பு தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை



முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் யானையின் இறப்புக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. அத்துடன் வனஜீவராசிகள் திணைக்களம் யானையின் மரணம் தொடர்பான காரணத்தை உடற்கூற்று மருத்துவ பரிசோதனையின் பின்னரே அறிய முடியும் என தெரிவித்துள்ளனர்.



# திருமலை மக்கள் சேவை மன்றத்தால் நிரந்தர வீடுகள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் நிரந்தர வீடுகள் நிர்மாணித்து அவை பயனாளிகளின் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) மன்றத்தின் தலைவர் எம். ரீ. ஏம். பாரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த யுத்தம் மற்றும் தற்போதைய பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு மிக நீண்டகாலம் நிரந்தர வீடுகள் இன்றி கஸ்டப்படும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 25 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பெல்ஜிய நாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனமான செலவிப் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆறு பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் விளாங்குளம், இலுப்பைக்குளம், சல்லி மற்றும் ஆத்திமோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள பயனாளிகளுக்கு குறித்த வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்யும் நிரந்தர வீடுகள் நிர்மாணித்து அவை பயகாளிகளின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு மன்றத்தின் தலைவர் எம். ரீ. ஏம். பாரிஸ் தலமையில் இடம்பெற்றது.

யுத்தம் மற்றும் பொருளாதார ரீதியில் பின்னடைந்து மிக நீண்டகாலம் நிரந்தர வீடுகள் இன்றி கஷ்டப்படும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 4 ஆம் கட்டத்தில் 25 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.





பெல்ஜிய நாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனமான செலவிப் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக ஆறு பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் விளாங்குளம், இலுப்பைக்குளம், சல்லி மற்றும் ஆத்திமோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள பயனாளிகளுக்கு குறித்த வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மக்கள் சேவை மன்றம் இதுவரைக்கும் ஏறத்தாழ 150 இற்கும் மேற்பட்ட நிரந்தர வீடற்றவர்களுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் வீடுகளை அமைத்து வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# மாணவர் ஆளுமை விருத்திக்கு பாடசாலைகளில் மாதிரிச் சந்தை

**(எம்.ஏ.றமீஸ்)**

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தரம்-03 மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதிரி சந்தை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றது.

அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இம்மாணவர் சந்தை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மாணவர்களின் கணித மற்றும் தமிழ் அறிவை மேம்படுத்துவதுடன், சமூக தொடர்பாடல் விருத்தி, வியாபார நடைமுறைகள், சுகாதார பழக்க வழக்கங்கள், நட்புறவுச் செயற்பாடுகள், அன்றாட வாழ்கைக்குத் தேவையான விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் அணுகுதல் போன்ற பல்வேறு விடயங்கள் இதன்மூலம் மாணவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டன.

இதன்போது சிறுவர்கள் மகிழ்வுடன் தமது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், பாடசாலையின் ஏனைய மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து இந்தச் சந்தையில் பல்வேறு பொருள்களைக் கொள்வனவு செய்த னர். குறித்த மாதிரி சந்தை செயற்பாடானது மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் செயற்பாடாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.







# மாணவத் தூதுவர்களுக்கான செயலமர்வு

**(வி.ரி. சகாதேவராஜா)**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாகச் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக மாணவர்களுக்கான மாணவத் தூது வர் மாவட்ட ரீதியான தமிழ்மொழி மூலமான நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் இந்த நிகழ்வானது உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை அம்பாறை மாவட்ட உள சமுக உத்தியோகத்தர் யூ.எல்.அசாடீன் ஒருங்கிணைப்பு செய்திருந் தார் .

அம்பாறை, சம்மாந்துறை காரைதீவு அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.





இதன் போது காரைதீவு சம்மாந்துறை நிந்தவூர். சாய்ந்தமருது ஆகிய பிரதேச பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றி மாணவ தூதுவர் நிகழ்வு தொடர்பான பயிற்சியை பெற் றுக் கொண்டனர்.





# புதுமுகத்துவாரம் இக்னேசியஸில் குடிநீர் இணைப்பு வழங்கி வைப்பு!

**(பழுவூரான்)**

லீலாவதி அறக்கட்டளையால் மட்டக் களப்பு கல்லடி புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலயத்துக்கான குடிநீர் விநியோகம் நேற்று புதன்கிழமை (07) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் பி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், லீலாவதி அறக்கட்டளைச் செயலாளர் திருமதி தி.ஹரிதாஸ், உபதலைவர் எஸ்.ஹரிதாஸ் மற்றும் செயற்குழு உறுப்பினர்களால் இந்தக் குடிநீர் விநியோகத் திட்டம் அங்குரார்ப்ப ணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அறக்கட்டளை அமைப்பின் உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



# கிழக்கு மாகாண எல்லே போட்டி; காயன்குடா கண்ணகி சம்பியன்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண மட்ட பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு காயன் குடா கண்ணகி வித்தியாலயம் 17 : 03 எனும் ஓட்ட வித்தியாசத்தில் மண்டூர் மகா வித்தியாலயத்தை தோற்கடித்து மீண்டும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை தொடர்ச்சியாக இரண்டு வருடங்களாக எல்லே போட்டியில் கிழக்கு மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி திருகோணமலை கோணேஸ்வரா மைதா னத்தில் நடைபெற்றது.

இந்தப் பாடசாலை கடந்த வருடம் நடைபெற்ற தேசிய ரீதியான போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.





## இஸ்ரோவின் மற்றொரு செயற்கைக்கோள் இந்திய சுதந்திர தினத்தன்று விண்ணில்

# ஏவல்!

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ, புவி கண்காணிப்பு செயல்பாடுகளுக்காக 175.5 கிலோ எடை கொண்ட அதிநவீன இ.ஓ.எஸ்.-8 எனும் செயற்கைக் கோளை வடிவமைத்துள்ளது.

இந்த செயற்கைக்கோள் சிறியரக எஸ்.எஸ்.எல்.வி. டி-3 ராக்கெட் மூலம் ஸ்ரீ ஹறிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தி லிருந்து சுதந்திர தினமான ஓகஸ்ட் 15ஆம் திகதி காலை 9.17 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது.

குறைந்த எடை கொண்ட மைக்ரோ வகையைச் சேர்ந்த இந்த செயற்கைக்கோள் பூமியிலிருந்து 475 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள குறைந்த புவி வட்ட சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்படவுள்ளது. இதன் ஆயுள்காலம் ஓர் ஆண்டு ஆகும்.

## நாடாளுமன்றத்தில் எதிரொலித்தது வினேஷ் விவகாரம்; எதிர்க்கட்சிகள்

# வெளிநடப்பு!






வினேஷ் போகத் விவகாரத்தால் நாடாளுமன்ற மேல்சபையில் எதிர்கட்சிகள் இன்று வெளிநடப்புச் செய்தன.

பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்திய மல்யுத்த வீராங் கனை வினேஷ் போகத், எடைப் பிரச்சினையால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இந்த விவகாரம் நாடாளுமன்றத் திலும் நேற்று எழுப்பப்பட்டது.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் இன்றும் வினேஷ் போகத் விவகாரம் எதிரொலித்தது. மேல்சபை கூடியதும் எதிர்கட்சித் தலைவரும், காங்கிரஸ் தலைவருமான மல்லி கார்ஜுன கார்கே மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள், வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்ட பிரச்சினை குறித்துப் பேச முயன்றனர்.

இந்தப் பிரச்சினையை எழுப்ப அவைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அனுமதிக்கவில்லை. இதனால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குரல் எழுப்பினார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இதற்கு முன்னதாக திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பி னர் டெரிக் ஓ பிரையன் சில பிரச்சினைகளை எழுப்ப முற்பட்டார். ஆனால், அவைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## 115 அடி ஆழத்தில் மயிலாப்பூர் மெட்ரோ ரயில் நிலையம்:

# கிராபிக்ஸ் காட்சிகள் வெளியீடு

சென்னையில் 3 தளங்களுடன் 115 அடி ஆழத்தில் அமைய உள்ள மயிலாப்பூர் மெட்ரோ ரெயில் நிலையத் தின் கிராபிக்ஸ் காட்சிகள் காண்போரை ஆச்சரியமடைய வைத்துள்ளன.

சென்னையில் 63 ஆயிரம் கோடி ரூபா மதிப்பில் 116 கிலோ மீற்றர் தொலைவுக்கு 2ஆம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வரு கின்றன.

அனைத்துப் பகுதிகளிலும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், மயிலாப்பூரில் கட்டப்படும் மெட்ரோ நிலை யம், ஏனைய நிலையங்களை விட ஆழமாகவும் பரந்த பொதுத் தளத் துடனும் உருவாகி வருகின்றது.

பொதுத் தளம், வணிக வளாகம், மேல் நடை மேடை, கீழ் நடை மேடை என 4 நிலைகளுடன் தரைக்குக் கீழாக 115 அடி ஆழத்தில் இந்த நிலையம் அமையவுள்ளது.


அதில், முதல் தளத்தில் (தரையி லிருந்து 55 அடி ஆழத்தில்) மாத வரம்-சிறுசேரி சிப்காட் செல்லும் மேல்தளப்பாதை ரயில்களும், 2ஆம் தளத்தில் (78 அடியில்) கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி செல்லும் ரயில்களும், 3ஆம் தளத்தில் (115 அடியில்) மாதவரம்-சிப்காட் செல்லும் கீழ்ப்பாதை ரயில்களும் வந்து செல் லும் வகையில் அமைக்கப்பட உள் ளது.

மயிலாப்பூரில் நிலத்தின் பரப்பு குறுகியதாக இருப்பதால் குண்டு தளங்கள் அமைக்க வேண்டியுள்ள தாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இரவோடு இரவாக தப்பியோட முயற்சி

## விமானத்திலிருந்து இறக்கப்பட்ட ஜெனரல்

# கைது!



பங்களாதேஷிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவ ஜெனரல், விமானத்திலிருந்து இறக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். இதேவேளை, அவர் நாட்டை விட்டு வெளியேறவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ஏற்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து, பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகி, நாட்டை விட்டு வெளியேறிய பின்னர், பங்களாதேஷ் இராணுவத்தின் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் மாற்றப்பட்டனர். இதவர்களில், மேஜர் ஜெனரல் ஜியாவுல்லும் அடங்குவார்.

இந்நிலையில், அவர் நேற்று இரவோடு இரவாக நாட்டை விட்டுச் தப்பிச் செல்ல முயன்றார். இதற்காக, டாக்கா விமான நிலையத்திற்கு நேற்றிரவு சென்ற அவர், எமிரேட்ஸ் 585 என்ற விமானத்தில் புறப்படத் தயாரானார்.

ஆனால், விமான ஓடுபாதையில் சென்ற விமானம் மீண்டும் விமான நிலையத்திற்கு திருப்பிக் கொண்டு வரப்பட்டு, நள்ளிரவில் அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் டாக்காகன் டோன்மெண்டுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

உளவு அமைப்பின் இயக்குநராக பதவி வகித்த அவர், 2022ஆம் ஆண்டு முதல் தேசிய தொலைத்தொடர்பு கண்காணிப்பு மைய இயக்குநர் ஜெனரலாக பதவியில் இருந்து வந்துள்ளார். தொலைபேசி அழைப்புகள், இ-மெயில்கள் மற்றும் சமூக ஊடகக் கணக்குகள் போன்ற மின்னணு தகவல் தொடர்புகளை இடைமறித்து கண்டறியும் பொறுப்பை இந்த மையம் மேற்கொள்ளும்.

அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதும், அவருக்குப் பதிலாக மேஜர் ஜெனரல் ரித்வானுர் ரகுமான் அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட ஜியாவுல் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.


மேஜர் ஜெனரல் ஜியாவுல் அசான், 1991ஆம் ஆண்டு ஜுன் 21ஆம் திகதி பங்களாதேஷ் இராணுவத்தில் இணைந்து அதிகாரியானார். அவருக்கு 2010இல் பங்களாதேஷ் பொலிஸ் பதக்கமும், 2011இல் ஜனாதிபதி பொலிஸ் பதக்கமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் நில நடுக்கம்; சுனாமி எச்சரிக்கை

ஜப்பானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாக அந்நாட்டிற்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

ஜப்பானில் இன்று காலை ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டரில் 6.9 ஆக பதிவாகி உள்ளது. நிலநடுக்கம் காரணமாக ஜப்பானிய தீவுகளான குய்ஷு மற்றும் ஷிகோகு ஆகிய பகுதிகளை ஒட்டிய கடலோர பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் மியாசகியிலிருந்து 20 மைல் தூரத்தில் ஏற்பட்டதாக அமெரிக்க நிலநடுக்கவியல் துறை தெரிவித்துள்ளது.



# ஏமனில் கனமழை; வெள்ளத்தில் சிக்கி 30 பேர் பலி

ஏமனில் பெய்த கனமழை, வெள்ளத்தில் சிக்கி 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

வளைகுடா நாடுகளில் ஒன்றான ஏமனில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகின்றது. அந்நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஹுடைடா, ஹஜ்ஹா, டைஸ் ஆகிய நகரங்களில் கனமழை கொட்டித்தீர்த்தது. கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், பலரது வீடுகளை வெள்ள நீர் சூழ்ந்தது.

இந்நிலையில், கனமழை, வெள்ளத்தில் சிக்கி 30 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். அதேவேளை வெள்ளத்தில் சிக்கிய பலரும் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கனமழை மேலும் சில நாள்களுக்கு நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமையால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

கனடா முரசு

பக்கங்கள் - 4

வியாழக்கிழமை | 08/08/2024

## குடியிருப்புத் தீப் பரவலில் ஹமில்டனில் ஒருவர் பலி!

கனடாவின் ஹமில்டனில் தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றின் முதல் மாடியில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

C2▶

# கனடாப் பிரதமருக்கு அச்சுறுத்தல் விடுத்த மூன்றாவது நபர் ஒன்ராரியோவில் கைது!



ஒன்ராரியோ, ஒகஸ்ட்08

**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு இணையம் ஊடாக அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் ஒன்ராரியோவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

**பிரதமர் ட்ரூடோ, பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராக இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**ஒன்ராரியோவில் யோர்க் பிராந்திய பொலிஸாரின் உதவியுடன் 33 வயதான டேவிட் ஷலெவ்ஸ்கி இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் தேசிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

**பிரதமருக்கு எதிராக கொலை அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டின் பேரில் அல்பேர்ட்டாவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு இரு வாரங்களில் இந்த கைது இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

# பயங்கரவாதத் தொடர்புகளைக் கொண்டோர் கனடாவிற்குள் எப்படி அனுமதிக்கப்பட்டனர்?

## விசாரணை மும்முரம் என்கிறார் பொதுப் பாதுகாப்பு அமைச்சர்



**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 08**

வெளிநாட்டில் உள்ள பயங்கரவாதக் குழுவுடன் சந்தேகத்திற்குரிய தொடர்புகளைக் கொண்ட இருவர் கனடாவிற்குள் எப்படி அனுமதிக்கப்பட்டனர் என்பதை மத்தியத் துறைகள் ஆய்வு செய்து வருவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் கூறுகிறார்.

அஹ்மத் ஃபுவாட் மோஸ்டாஃபா எல்டிடி மற்றும் அவரது மகன் மொஸ்டாஃபா எல்டிடி, ஆகியோர் கடந்த வாரம், ஒன்ட் ரிச்மண்ட் ஹில்லில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஒன்பது வெவ்வேறு பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த வாரம் இந்தக் குற்றச்சாட்டுகளை தேசிய பொலிஸ் பிரிவு அறிவித்தது.

இரண்டு பேரும் ‘டொராண்டோவில் ஒரு தீவிரமான, வன்முறைத் தாக்குதலைத் திட்டமிடுவதற்கான மேம்பட்ட நிலைகளில்’ இருந்தனர் எனவும் தேசிய பொலிஸ் பிரிவு குறிப்பிட்டிருந்தது.

பெரும்பாலான குற்றச்சாட்டுகள் கனடாவில் நடப்பதாகக் கூறப்படும் செயல்பாடுகளுடன்

C2▶



# கறுப்பின சமூகத்தின் உறுப்பினர்களுடன் வின்னிபெக்கில் பிரதம ட்ரூடோ சந்திப்பு

**மனிடோபா, ஒகஸ்ட்08**

பிரதம ஜஸ்டின் ட்ரூடோ வின்னிபெக்கில் கறுப்பின சமூகத்தின் உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களைச் சந்தித்துள்ளார்.

பிளாக் ஹிஸ்டரி மனிடோபா நடத்திய காலை நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடினார்.

நிதி மற்றும் பிற வணிகத் தேவைகளுக்கு மக்களுக்கு உதவும் அரசாங்கத்தின் கறுப்பு தொழில்முனைவோர் திட்டத்தைப் பற்றிக் கூறினார்.

மூலதனத்தைஅணுகுவதில்தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் தடைகளை குறைக்கும் பணி தொடர வேண்டும் என்றார்.

பின்னர், சுகாதாரப் பணியாளர்களுக்கான பார்பிக்யூவிற்குச் சென்ற பிரதமர், அங்கு கூடியுயிருந்தவர்களுடன் கலந்துரையாடினார்.

இரண்டு நிகழ்வுகளும் வின்னிபெக் தெற்கில் நடைபெற்றன. தற்போது லிபரல் கட்சியின் வசம் உள்ள இந்தத் தொகுதி, நீண்ட காலம் கன்சர்வேட்டிவ் தொகுதியாக இருந்தமை குறிப்பிடத் தக்கது.



**குடியிருப்பு...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்தச் சம்பவத்தில் 63 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹமில்டனின் ஜெரோம் கிரசன்ட் பகுதியில் இந்தத் தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டடத்தின் முதலாம் மாடியில் எரிந்து கொண்டிருந்த குடியிருப்பு யுனிட்டில் இந்த நபர் சலனமற்ற நிலையில் நாற்காலி ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்டவரை, தீயணைப்புப் படையினர் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். எனினும் அந்நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

**பயங்கரவாத...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

தொடர்புடையவை.

ஆனால் மூத்த எல்டிடி கனடாவுக்கு வெளியே ஒரு மோசமான தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

கனடாவுக்குச் செல்ல விரும்பும் விண்ணப்பதாரர்களைத் திரையிடுவதற்கு ஒன்றிணைந்து செயல்படும் பொதுப் பாதுகாப்பு மற்றும் குடிவரவுத் துறைகள், குற்றம் சாட்டப்பட்ட ஆண்கள் தொடர்பான நிகழ்வுகளின் கால வரிசையை நிறுவுவதற்குச் செயல்படுகின்றன எனத் தேசிய பொலிஸ் பிரிவு கூறுகிறது.



# புதிதாக பெரும் எண்ணிக்கையில் பல் வைத்தியர்கள் மத்திய அரசின் பல் சிகிச்சைத் திட்டத்தில் இணைவு

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 08**

மத்திய அரசாங்கத்தின் பல் சிகிச்சைத் திட்டத்தில் புதிதாக பெரும் எண்ணிக்கையிலான பல் வைத்தியர்கள் இணைந்துள்ளனர் என சுகாதார அமைச்சர் மார்க் ஹொலன்ட் தெரிவித்துள்ளார்.

மே மாதத்தில் இந்தத் திட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட முதியவர்களுக்கான பல் மருத்துவ உரிமைகோரல்களை அரசாங்கம் ஏற்கத் தொடங்கியது.

மேலும் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், வரிக் கடன் உள்ளவர்களுக்குத் தகுதிபெறும் அடிப்படையை விரிவுபடுத்தியுள்ளது.

சுமார் 2.3 மில்லியன் நோயாளிகள் விரைவாக பதிவு செய்தாலும், கவனிப்பை வழங்க பல் மருத்துவர்களைப் பெறுவது மிகவும் சவாலாக இருக்கின்றது.

கடந்த மாதம் வரை, சுமார் 11,500 பல் மருத்துவர்கள், சுகாதார நிபுணர்கள் மற்றும் பல் மருத்துவ சிகிச்சையாளர்கள் இந்த திட்டத்தின் கீழ் பராமரிப்பு வழங்க பதிவு செய்துள்ளனர், இது கனடாவில் 50 சதவீதத்திற்கும் குறைவான பல் நிபுணர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பல் மருத்துவர்கள் மற்ற வழங்குநர்களைக் காட்டிலும் பதிவு செய்வதில் மிகவும் மெத்தனமாகத் தோன்றினர்.

ஏனெனில் நாடு முழுவதும் உள்ள பல் மருத்துவ சங்கங்கள் திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் பல் மருத்துவர்களின் நிர்வாகச் சுமை குறித்து கவலை தெரிவித்தன.

16,612 பல் மருத்துவர்கள் இப்போது பங்கேற்கின்றனர் என ஹொலண்ட் கூறுகின்றார்.

இது கனடாவில் உள்ள அனைத்து பல் மருத்துவர்கள் மற்றும் பல் நிபுணர்களில் சுமார் 75 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

# கியூபெக்கின் மூன்று பெரிய நகரங்களில் இன்று 2,600 ஹோட்டல் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு



**கியூபெக், ஓகஸ்ட் 08**

கியூபெக்கின் மூன்று பெரிய நகரங்களில் உள்ள ஹோட்டல் தொழிலாளர்கள், பரபரப்பான கோடை சுற்றுலாப் பருவத்தின் மத்தியில் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஒரு நாள் வேலைநிறுத்தம் மொன்றியல் பிராந்தியம், கியூபெக் மற்றும் ஷேர்ப்ரூக் ஆகியவற்றில் உள்ள 23 ஹோட்டல்களைப் பாதிக்கும்.

மேலும் 2,600 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதில் அடங்குவர்.

ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சங்கமான Confédération des syndicats nationaux (CSN ஆகியவற்றுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகள் கடந்த வாரம் மாகாணம் தழுவிய வேலைநிறுத்தத்திற்கு தொழிற்சங்கம் முதன்முதலில் அச்சுறுத்தியதில் இருந்து முடங்கியுள்ளன.

நான்கு ஆண்டுகளில் 36 சதவீத ஊதிய உயர்வு, வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பயன்பாட்டை நிறுத்துதல் உள்ளிட்ட ஏழு முக்கிய கோரிக்கைகளை ஹோட்டல் ஊழியர்கள் வைத்துள்ளனர்.



# கனடாவின் உளவு அமைப்பின் பதவி விலகும் தலைவர் அமெரிக்க மூலோபாய உளவு நிறுவனத்தில் இணைவு!

**ஒன்ராரியோ, ஓகஸ்ட்08**

கனடாவின் உளவு அமைப்பின் வெளிச்செல்லும் தலைவர் அறிவுசார் சொத்து திருட்டுக்கு எதிராக போரை நடத்தி வரும் அமெரிக்க மூலோபாய உளவுத்துறை நிறுவனத்தில் இணைகிறார்.

ஸ்ட்ரைடர் டெக்னாலஜிஸ் என்ற மேற்படி நிறுவனம் தனது உலகளாவிய புலனாய்வுப் பிரிவின் புதிய நிர்வாகப் பணிப்பாளராக டேவிட் விக்னோல்ட்டை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஏழு ஆண்டுகள் பணியில் இருந்த பிறகு கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவையின் இயக்குனர் பதவியில் இருந்து கடந்த மாதம் விலகுகின்றார் என விக்னோல்ட் கூறினார்.

வெளிநாட்டு தலையீட்டிலிருந்து பாதுகாப்பதற்கான அதன் முயற்சிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தாம் செய்த பணி குறித்து பெருமைப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் ஜூலை 20 முதல் ஊளுஐளு இன் இடைக்கால பணிப்பாளராக தொழில் உளவுத் துறை அதிகாரி வனேசா லாய்டை நியமித்தார்.

லொயிட் ஆறு மாதங்கள் அல்லது ஒரு புதிய நிரந்தர இயக்குநர் நியமிக்கப்படும் வரை இந்தப் பதவியில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# பிரிட்டனில் போராட்டப் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கத் தன் பிரஜகளுக்கு கனடா ஆலோசனை

**ஒன்ராரியோ, ஓகஸ்ட்08**

பிரித்தானியாவிற்கான பயணங்கள் தொடர்பில் கனடா அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பிரித்தானியாவில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் இவ்வாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் அமைதியான போராட்டங்கள் கூட வன்முறைகளாக வெடிக்கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கலகங்கள், வன்முறைகள், கொள்ளைகள் போன்றன இடம்பெறக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டங்கள் காரணமாக பொதுப் போக்கவரத்திற்கும் பாதிப்பு ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக இந்தப் பயண அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்கு செல்வதனை தவிர்க்குமாறு கனடிய அரசாங்கம், பிரித்தானிய வாழ் கனடியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.